# மேட்டுப்பாளையம் நகராட்சி

## மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 29.07.2022ஆம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 3.30 மணிக்கு கூட்டப்படவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத் துணைத் தலைவர் ,நகர் மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி.

**கூட்டப் பொருள்**

28.06.2022ம் தேதிய நகர்மன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்

| | |
|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன எரியூட்டு மயானம் Rotary Mettupalayam Crematorium Trust நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிறுவனம் தகனம் செய்ய 1500/- மற்றும் கையாளும் கட்டணம் ரூ.1500/- என மொத்தம் ரூ.3000/- ஒரு பிரேதத்திற்கு வசூலிக்கப்பட்டு வருகிறது.<br><br>தற்போது எரிவாயு உருளை விலை உயர்வு செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட தொகையை உயர்வு செய்ய கோரினர். இதன் அடிப்படையில் 04.05.2022 அன்று நடைபெற்ற நிர்வாக குழுவில் ஒரு பிரேதத்திற்கு தகனம் செய்ய ரூ.5500/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே Rotary Mettupalayam Crematorium Trust என்ற நிறுவனத்திற்கு தகனம் செய்ய நிர்வாக குழு கட்டணமாக நிர்ணயம் செய்த தொகை ரூ.5500/- பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.6502/2005/எப்1<br>தீர்மானம் எண் 392<br>தீர்மானம் 32 நகர்மன்ற உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்டது. |
| 2. | மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையர் திரு.இரா.வினோத் அவர்களின் 2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br><br>தீர்மானம் எண் 393<br>தீர்மானம் பதிவு செய்யப்பட்டது |
| 3. | மேட்டுப்பாளையம் நகராட்சி பொறியாளர் திருமதி.சி.கவிதா அவர்களின் 2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br><br>தீர்மானம் எண் 394<br>தீர்மானம் பதிவு செய்யப்பட்டது. |

| | |
|---|---|
| 4 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு வருகை தந்த நிகழ்ச்சிக்கான செலவினத் தொகை ரூ.1,92,200/-ஐ நகராட்சி நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு :<br>1. அனுமதிக்கலாம்.<br>2. நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண். 2755/2022/இ1<br>தீர்மானம் எண் 395<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 5 | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக்குழு (21-23) கோயம்புத்தூர் மாவட்டத்தில் 24.05.2022 மற்றும் 25.05.2022 ஆகிய நாட்களில் ஆய்வுக்கூட்டம் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி கோவை கொடிசியா கூட்ட அரங்கில் ஆய்வுக் கூட்டம் நடத்துவதற்கு தேவையான அனைத்து முன்னேற்பாடுகளும் செய்ய செலவினம் ரூ.32,934/- செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு :<br>1. அனுமதிக்கலாம்.<br>2. நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண். 2755/2022/இ1<br>தீர்மானம் எண் 396<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 6 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் மூன்று குடிநீர்த் திட்டங்களில் ஆற்று நீரை ராவாட்டரை (Raw Water) எடுத்து வடிதளங்கள் மூலம் சுத்தம் செய்து சுத்த நீராக (Clear Water) மற்றி மேல்நிலை தொட்டிகளில் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்பொழுது பெய்து வரும் மழையால் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு செம்மண் கலந்து வருவதாலும், கடித தன்மை அதிகமாக இருப்பதாலும் ஆற்று நீரின் அழுக்கை நீக்க (turbidity) நீக்க படிகாரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது படிகாரம் கையிருப்பு குறைவாக இருப்பதாலும் இனிவரும் மழைக்காலங்களில் கூடுதலாக படிகாரம் தேவைப்படுவதாலும் 20 டன் படிகாரம் வாங்க உத்தேச செலவினம் ரூ.3,60,000 மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு குடிநீர் அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2899/2022/இ1<br>தீர்மானம் எண் 397<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 7 | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 , கோத்தகிரி ரோடு, 20 கிருஷ்ணசாமி லே அவுட், வார்டு எண்.26 GMRC பள்ளி அருகில் உள்ள ஆழ்துளை கிணறுகள் நீண்ட நாட்களாக இயங்காத காரணத்தால் நீர் குறைந்து மோட்டார் பழுதாகி இயக்க முடியாத நிலையில் உள்ளது. ஆகையால் மேற்படி இடங்களில் உள்ள ஆழ்துளை கிணறுகளை சுத்தம் செய்து புதிதாக மோட்டார் பொருத்தி, பைப்லைன் மற்றும் சின்டெக்ஸ் டேங்குகள் பொருத்தி இயக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் அவசியம் அவசரம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1651/2020/இ1<br>தீர்மானம் எண் 398<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 8 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் நீரேற்றம் செய்யப்படும் குடிநீர் நகரில் உள்ள மேல்நிலைத் தொட்டிகளில் நிரப்பப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மூன்று குடிநீர் திட்டங்களிலும் அவ்வப்போது ஏற்படும் பம்பின் மெயின் பகிர்மானக் குழாய்களில் உடைப்புகளை சரி செய்யவும் , பொது குழாய், பொது கழிப்பிடங்களுக்குத் தேவையான உதிரிச் சாமான்கள் விநியோகம் செய்யவும் தற்போது சாலை வசதி மற்றும் பாதாளசாக்கடை பணிகள் நடைபெறுவதால் அடிக்கடி உடைப்புகள் ஏற்படுவதை சரி செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் அவசியம் அவசரம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்.1651/2020/இ1<br>தீர்மானம் எண் 399<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 9 | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30, 28 வசந்த நகர் மற்றும் புருசோத்தமன் லே அவுட் புதிதாக தெருவிளக்கு அமைக்க நகர்மன்றத் தீர்மான எண்.52, நாள்.28.02.2020ல் அனுமதி பெறப்பட்டு மின்சார வாரியத்திற்கு விண்ணப்பம் செலுத்தி மதிப்பீட்டுத் தொகை ரூ.15410 நாள்.19.01.2022 அன்று செலுத்தப்பட்டது மேற்படி இடங்களுக்கு புதிதாக 7 தெருவிளக்கு பிட்டிங் மற்றும் உபகரணங்கள் வாங்க ஆகும் செலவினம் ரூ.17500/-க்கு ஆண்டு பராமரிப்பு செய்யும் நிறுவனமான ஸ்நெல் எனர்ஜி எக்யூப்மெண்ட் கோவை நிறுவனத்திடம் வாங்க ஒப்பந்தக் குழுவின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** ஒப்பந்தக் குழு ஏற்கலாம்.<br>ந.க.எண்.6702/2018/இ1<br>தீர்மானம் எண் 400<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 10 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு 27.05.2022 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பேருந்த நிலையம் க.எண்.45ற்கு அதிக பட்ச ஏல கேள்வி கோரிய திருமதி.பாத்திமா அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டத. இக்கடைக்கு மூடு கதவு (Rolling Shatter) மிகவும் பழுதடைந்துள்ளதால் அதை சரி செய்து கொள்ள அனுமதி வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார்.<br><br>எனவே, மேற்கண்ட கடைக்கு மூடு கதவு(Rolling Shatter) அமைத்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்பப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>மேற்கண்ட பேருந்து நிலையம் க.எண்.45ற்கு அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மூடு கதவு (Rolling Shatter) பொருத்தப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2689/2022/அ1<br>தீர்மானம் எண் 401<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 11 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா வணிக வளாகம் கடை எண்.27யை திருமதி. சுப்புலட்சுமி என்பவருக்கு அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007ன்படி 9 ஆண்டுகள் கடை நடத்தி கொள்ள உரிமம் வழங்கப்பட்டது. திருமதி.சுப்புலட்சுமி என்பவர் தொடர்ந்து 6 ஆண்டுகள் (இரண்டாவது மூன்றாண்டுக் காலம்) கடை நடத்தி வந்தார். தற்போது 30.06.2022 உடன் இரண்டாவது மூன்றாண்டு முடிவுற்றதால் 01.07.2022 முதல் 3வது முறையாக 3 ஆண்டுகளுக்கு புதுப்பிக்கப்பட வேண்டும். ஆனால் மேற்படி நபர் தனது கணவர் உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் கடையை தொடர்ந்து நடத்த இயலாது என்பதால் மேலும் மூன்றாண்டு குத்தகை உரிமம் புதுப்பிக்க விருப்பமில்லை என கோரி 30.06.2022ல் கடையை காலி செய்து நகராட்சி வசம் ஒப்படைத்துள்ளார். எனவே, மேற்கண்ட கடையை 26.07.2022ம் தேதி நடைபெறும் மறு ஏலத்தில் ஏலம் விட மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**:<br>மேற்கண்ட ஏலதாரர் திருமதி.சுப்புலட்சுமி என்பவர் 30.06.2022ல் கடையை காலி செய்து ஒப்படைக்கப்பட்டதால் மறுஏலம் நடவடிக்கை மேற்கொள்ள அவசர அவசியத்தை கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி கடையின் குத்தகை உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் கோரப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.211/2022/அ1<br>தீர்மானம் எண் 402<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

12 இந்நகராட்சியில் இயங்கி வரும் இரண்டு நகல் இயந்திரங்கள் பழுதாகி உள்ளதால் அதனை ஆய்வு செய்து சரி செய்து தரும் பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | பெயர் | Item | | Amount |
|---|---|---|---|---|
| 1 | Dreams Tech 278 இரண்டாம் தளம், படையப்பா காம்ப்ளக்ஸ், காந்திபுரம், கோவை | Comprehesive Service | 15000 | 25,800/- |
| | | Drumkit | 10800 | |
| 2 | Sai printers & Copiers 33/23/5, கங்கை நகர், சங்கனூர் மெயின் ரோடு, கணபதி, கோவை | Comprensive Service | 20,000 | 31,500/- |
| | | Drumkit | 11,500/- | |
| 3 | Print tec 105,வித்யா லட்சுமி காம்பளக்ஸ், காந்திபுரம், கோவை | Comprensive Service | 16,000 | 27,000 |
| | | Drumkit | 11,000/- | |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள Dreams Tech நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

குறைந்த விலைப்புள்ளியை ஏற்று Dreams Tech நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2322/2022/அ2

தீர்மானம் எண் 403

தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

13 மேட்டுப்பாளையம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் வாகனங்களுக்கு 2022-2023ம் ஆண்டிற்கு காப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டியுள்ளதால் அதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.5,00,000/-த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.400/2017/எச்1

தீர்மானம் எண் 404

தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

14 இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN40B-1483க்கு (Dumper Plazer) பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு 08.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை |
|---|---|---|
| 1 | திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஓர்க்ஸ், ஈரோடு | ரூ.3,41,600/- |
| 2 | திருவாளர். முருகன் ஆட்டோஸ், ஈரோடு | ரூ.3,24,500/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். முருகன் ஆட்டோஸ், மேட்டுப்பாளையம் ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம்

தீர்மானம் எண் 405

தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

15 இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN40P-1320க்கு (Tipper Lorry) பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு 08.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை |
|---|---|---|
| 1 | திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஓர்க்ஸ், ஈரோடு | ரூ.3,23,800/- |
| 2 | திருவாளர். முருகன் ஆட்டோஸ், ஈரோடு | ரூ.3,14,700/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். முருகன் ஆட்டோஸ், மேட்டுப்பாளையம் ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 406

தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

16 இந்நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை 210 ஆகும். அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை நாள்.30.04.1997ன்படி நிர்ணயிக்கப்பட்ட பணியிடங்கள் 283 தற்போது பணியில் உள்ள தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை 79 ஆகும். எனவே, தூய்மைப் பணியாளர்களின் பற்றாக்குறையை போக்க 16 வார்டுகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு தூய்மைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி தனியார் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி 01.07.2019 உடன் முடிவடைந்து பின்பு ஒவ்வொரு மூன்று மாதத்திற்கும் நகர்மன்றத்தின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது 31.07.2022 உடன் முடிவடைய உள்ளதால் தூய்மைப் பணிகள் தொய்வின்றி நடைபெற நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று தூய்மைப் பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் துப்புரவு ஆய்வரின் 14.07.2022ம் தேதிய அறிக்கையின்படி அடுத்த 3 ஆண்டுகளுக்கு தனியார் மூலம் தூய்மைப் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் கொள்கை ரீதியான அனுமதி (Priniciple Clearance) பெற்றிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| | 2. பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கொள்கை ரீதியான அனுமதியை பெற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்.6219/2009/எச்1<br>தீர்மானம் எண் 407<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 17 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் அரசாணை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் தறை, நாள்.30.04.1997ன்படியும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2902/பி3/2016 நாள்:24.02.2016 மற்றும் 18.07.2016ன்படியும் முறையே 61 மற்றும 90 பணியாளர்களுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட செயல்முறைகளில் 01.07.2019 வரை நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேலும் 3 ஆண்டுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி இவ்வலுவலக ந.க.எண்.எச்1/6219/2016 நாள் : 18.07.2022ன்படி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் என்பதாலும், சுகாதாரப் பணிகள், பாதிக்காமல் இருக்கவும், பொது சுகாதார அவசர அவசியத்தை கருதி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி இந்நகராட்சியில் தற்போது தனியார் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர். எஸ்.எஸ். இஞ்சினியர்ஸ் என்ற நிறுவனத்திற்கு 01.08.2022 முதல் ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** :<br>அனுமதி வழங்கலாம். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.494/2019/எச்1<br>தீர்மானம் எண் 408<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 18 | இந்நகராசிக்குட்பட்ட 33 வார்டுகளில் தற்போது நெகிழி பயன்பாடு முற்றிலும் தடை செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது. நகராட்சி பகுதியில் உள்ள பொது மக்கள் வணிக வியாபாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பிளாஸ்டிக்கினால் ஏற்படும் தீமைகள் பற்றி எடுத்துரைத்து பிளாஸ்டிக் கேரி பேக்குகளுக்கு பதிலாக மஞ்சப்பை உபயோகிப்பதை ஊக்குவிக்கும் விதமாக விழிப்புணர்வு ஏற்படுத்த மல்டி கலர் கோட்டட் ஸ்டிக்கர்கள் 10000 |

எண்ணிக்கைகள் மற்றும் மல்டி கலர் நோட்டீஸ்கள் 20000 எண்ணிக்கைகள் வாங்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.3,50,000/- மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** :

1. அனுமதிக்கலாம்.
2. பிளாஸ்டிக் உபயோக்கப்படுத்துவதை தவிர்க்க இந்நகராட்சியை பிளாஸ்டிக் இல்லா நகரமாக உருவாக்க அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.
   ந.க.எண்.1050/20/எச்1

தீர்மானம் எண் 409

தீர்மானம் நிராகரிக்கப்பட்டது

19 இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு பொதுமக்களிடம் நெகிழிப் பயன்பாட்டை தவிர்த்து மஞ்சப்பை உபயோகிப்பதை ஊக்குவிக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஸ்டிக்கர்கள் மற்றும் நோட்டீஸ்கள் விநியோகம் செய்ய கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| | | ஸ்டிக்கர் ஒன்றுக்கு (ரூ) | நோட்டீஸ் ஒன்றுக்கு (ரூ) |
|---|---|---|---|
| 1 | Tirunelveli dist. multi purpose Service industrial Co-op Society Ltd | 15 | 7 |
| 2 | The Thoothukudi Dist Hiteach Printing and allied Service Industrial Co-op society Ltd | 16 | 8 |
| 3 | SSI Indco Service | 15.50 | 7.50 |

மேற்கண்ட விலைப்புள்ளியில் குறைவாக வழங்கி உள்ள வ.எண்.1ல் உள்ள நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1050/2022/எச்1

தீர்மானம் எண் 410

தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 20 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN40M-9694க்கு Tata Ace டயர் மற்றும் பேட்டரி பொருத்தும் பணிக்கு 08.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. |

| வ. எண். | ஒப்பந்ததாரரர் பெயர் | ஒப்பந்தத் தொகை |
|---|---|---|
| 1 | திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஓர்க்ஸ், ஈரோடு | ரூ.24,900/- |
| 2 | திருவாளர். முருகன் ஆட்டோஸ், ஈரோடு | ரூ.25,800/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். முருகன் ஆட்டோஸ், மேட்டுப்பாளையம் ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 411

தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 21 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண்.24 ல் உள்ள நகராட்சி பேருந்து நிலையம் உள்ளது. இதில் தினந்தோறும் அதிக அளவில் மக்கள் கூடுகிறார்கள். மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்தில் இருந்து அதிக அளவில், உதகை , குன்னூர் ஆகிய சுற்றுலா தளங்களுக்கு பொது மக்கள் செல்கிறார்கள். இதனால் இயங்கி வரும் இரண்டு கழிப்பிடங்களை தூய்மையாக பேன தண்ணீர் வசதி தேவைப்படுகிறது. இதகால் இப்பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்க ரூ.3.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்து அப்பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.<br>தீர்மானம் எண் 412<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 22 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2ல் உள்ள வெள்ளிப்பாளையம் சாலையில் நகராட்சியில் புதியதாக கழிப்பிடம் கட்டப்பட உள்ளது. இதற்கு தண்ணீர் வசதி மேற்கொள்ளும் பொருட்டு புதியதாக ஒரு ஆழ்துளை கிணறு அமைக்க வேண்டியுள்ளது. இதற்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.<br>தீர்மானம் எண் 413<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 23 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.9 உள்ள குஞ்சப்பனை மாரியம்மன் கோவில் பகுதியில் இருந்து மகாதேவபுரம் 5வது வீதி வரை உள்ள மழைநீர் வடிகால் மிகவும் சேதம் அடைந்துள்ளது. இதனால் இப்பகுதியில் உள்ள மழைநீர் வடிகாலினை சீரமைக்க ரூ.3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.<br>தீர்மானம் எண் 414<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 24 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்ய வால்வுகளை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பகுதியில் உள்ள வால்வுகளை பாதுகாக்க வால்வு pit கள் அமைக்க வேண்டியுள்ளது. தற்போது சாலை பணிகள், பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் ஆகியவை நடைபெற்று வரும் காரணத்தால் வால்வு Pit கள் அதிக அளவில் சேதம் அடைகிறது. இதனை புதுப்பிக்க மற்றும் புதியதாக வால்வு Pitகள் அமைக்க ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.<br>தீர்மானம் எண் 415<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 25 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் கலைஞரின் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022-2023ன் கீழ் அரசாணை எண்.88 நாள்.17.06.2022ன் மூலம் கீழ்க்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.29 மணிநகர் உயர்நிலைப்பள்ளியின் எதிர்ப்புறம் வார்டு பி பிளாக் 32 Ts No 72 புதிய அறிவு சார்மையம் கட்டுதல் | ரூ.187.39 இலட்சம் |

மேற்காணும் பணிக்கு ந.க.எண்.001/2022/D01 dated 27.06.2022 அன்று தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 15.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இணையதளம் மூலம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மற்றும் offline மூலம் இணையதளத்தில் கொடுத்துள்ள அதே ஒப்பந்ததாரர்கள் கீழ்க்கண்டவாறு கொடுத்துள்ளனர்.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.29 மணிநகர் உயர்நிலைப்பள்ளியின் எதிர்ப்புறம் | ரூ.187.39 இலட்சம் | திருவாளர். V.R.K கன்ஸ்ட்ராக்சன்ஸ் |

| | | | |
|---|---|---|---|
| | வார்டு பி பிளாக் 32 Ts No 72 புதிய அறிவு சார்மையம் (Knowledge Centre) கட்டுதல் | | திரு.D.ராஜ்குமார் |

மேற்காணும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி உறைகளில் தொழில்நுட்பத் தகுதிக்கான உறையினை 15.07.2022 அன்று கூர்ந்தாய்வு குழுவினர் முன்னிலையில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் மேற்காணும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி உறையுமே தொழில்நுட்ப தகுதிகள் பெற்று 18.07.2022 அன்று விலைப்புள்ளி உறையினை பிரித்து கூர்ந்தாய்வு செய்யப்பட்டு , ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.29 மணிநகர் உயர்நிலைப்பள்ளியின் எதிர்ப்புறம் வார்டு பி பிளாக் 32 Ts No 72 புதிய அறிவு சார்மையம் கட்டுதல் | ரூ.187.39 இலட்சம் | திருவாளர். V.R.K கன்ஸ்ட்ராக்சன்ஸ் | 4.96% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு.D.ராஜ்குமார் | 6.82% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளி இரண்டு ஒப்பந்தாரர்களும் மதிப்பீட்டிற்கு கூடுதலாக கொடுத்துள்ளதால் 18.07.2022 அன்று 11.30 மணியளவில் விலை குறைப்பு செய்து தர கோரியதில் தற்பொழுது விலையேற்றம் மற்றும பணியாளர்களின் கூலி உயர்வு ஆகியவை காரணமாக விலைகுறைப்பு செய்து தர இயலாது எனவும் தாங்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்திற்கே பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கிட கோரியுள்ளனர்.

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. இவ்வொப்பந்தப்புள்ளிகள் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்குட்பட்டு மதிப்பீட்டிற்கு 5% மிகாமல் இருப்பதாலும் பொதுமக்களின் நலன் கருதியும் மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலதாமதம் அதற்குரிய செலவினம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டும் இவ்வொப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. இவ்வொப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டிற்கு அதிகமாக இருப்பதால் அதிகப்படியான தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.1650/2022/இ1

தீர்மானம் எண் 416

தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 26 | பார்வை : நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17404/2022/எம்.சி.ஏ2, நாள்.14/07/2022<br>பார்வையில் காணும் கடிதத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சமூக நலத் துறையின் மான்ய கோரிக்கையின் போது அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் 1முதல் 5ஆம் வகுப்பு வரை அரசுப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காலைச் சிற்றுண்டி வழங்கும் சிறப்புத் திட்டத்தினை அறிவித்துள்ளார்.<br>எனவே , மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதிக்குள் செயல்படும் கீழ்க்கண்ட 9 நகரவை துவக்கப்பள்ளியில் படிக்கும் 1119 எண்ணிக்கை மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்க உத்தேசிக்கப்பட்டு நடூர் நகரவைத் துவக்கப்பள்ளியில் ரூ.23.60 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைப்பு சமையற்கூடம் அமைக்கப்பட உள்ளது.<br><br>வ. எண் \| பள்ளியின் பெயர் \| மாணவர்களின் எண்ணிக்கை<br>1 \| அண்ணாநகர் நகராட்சி துவக்கப்பள்ளி \| 54<br>2 \| காட்டூர் நகராட்சி துவக்கப்பள்ளி \| 174<br>3 \| நடூர் நகராட்சி துவக்கப்பள்ளி \| 68<br>4 \| நேருஜி நகராட்சி துவக்கப்பள்ளி \| 26<br>5 \| நேதாஜி நகராட்சி துவக்கப்பள்ளி \| 74<br>6 \| எஸ்.எம்.நகர் நகராட்சி துவக்கப்பள்ளி \| 21<br>7 \| வள்ளுவர் நகராட்சி துவக்கப்பள்ளி \| 427<br>8 \| வ.உ.சி. நகராட்சி துவக்கப்பள்ளி \| 25<br>9 \| அன்னூர் ரோடு துவக்கப்பள்ளி \| 250<br> \| \| 1119 எண்ணிக்கை<br><br>எனவே, மேற்கண்ட பணியினை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு<br>1. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் ஏற்கலாம்.<br>2. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>தீர்மானம் எண் 417<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 27 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பத்திரகாளியம்மன் சாலை மிகவும் சேதம் அடைந்துள்ளது. தற்பொழுது பக்தர்கள், ஆடி குண்டம் திருவிழாவை முன்னிட்டு அதிக அளவில் இச்சாலையினை பயன்படுத்துகிறார்கள். மேலும் தற்பொழுது மழைக்காலம் என்பதால் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்த மிகவும் சிரமப்படுகிறார்கள். இதனால் இச்சாலையினை போக்குவரத்திற்கு ஏதுவாக Wmm Patches பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது இப்பணிக்கு ரூ.10.00 இலட்சத்தில் தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| | தீர்மானம் எண் 418<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 28 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 17ல் உள்ள ரங்கையா வீதி மற்றும் எல்.எஸ்.புரம் நான்காம் வீதியில் உள்ள சிறுபாலம் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் இப்பகுதி மக்களுக்கு மிகுந்த இடையூறாக உள்ளது. மேலும் இவ்வழியாக வாகனங்கள் செல்ல மிகுந்த சிரமமாக உள்ளது. இதனால் இப்பகுதியில் சிறுபாலம் அமைக்க ரூ.2.60 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் 419<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 29 | மேட்டுப்பாளையம்ம நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.1ல் உள்ள விநாயகர் கோவில் தெருவில் உள்ள மழைநீர் வடிகால் முற்றிலும் சேதம் அடைந்து உள்ளது. இதனால் மழை காலங்களில் மழைநீர் சாலையில் தேங்குகிறது. மேலும் மழைநீர் வீடுகளுக்குள் புகுந்து மிகுந்த சேதம் விளைவிக்கிறது. இதனால் இப்பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்க ரூ.3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் 420<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 30 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.23ல் உள்ள பகுதிக்கு போதிய அளவிற்கு தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் பொது மக்களுக்கு மிகுந்த இடையூறாக உள்ளது. இதனால் இப்பகுதிக்கு போதிய தண்ணீர் வசதி மேற்கொள்ள Sintex Bed அமைத்து ரூ.2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>தீர்மானம் எண் 421<br>தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 31 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 22.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது. |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட தனியார் மூலம் குழாய் திருப்புநர் பணி மற்றும் அனைத்து மேல்நிலைத்தொட்டிகளுக்கும் காவலர் பணி மேற்கொள்ளுதல் | ரூ.9.90 இலட்சம் | திரு.எம்.வேலுசாமி | 0.01. % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.சி.நாகராஜ் | 4.26% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண்.28 முல்லை நகர் பகுதியில் புதிய பகிர்மானக் குழாய் அமைத்தல் பணி | ரூ.2.00 இலட்சம் | திரு. எம்.வேலுசாமி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.சி.நாகராஜ் | 4.73% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3 | தலைமை நீரேற்று நிலையத்திற்கு படிகாரம் (Sulphat of Alumina Febric ) வாங்குதல் | ரூ.3.60 இலட்சம் | திரு.அல்கெம் இண்டஸ்ட்ரீஸ் | 3,55,060/- மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர்.General MArkitting Enterprices | 3,56,980/- மதிப்பீட்டிற்கு குறைவு |
| 4 | தலைமை நீரேற்று நிலையத்திற்கு தேவையான Choline சிலிண்டரில் நிரப்புதல் | ரூ.5.00 இலட்சம் | திரு.அல்கெம் இண்டஸ்ட்ரீஸ் | 4,97,300/- மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர்.General MArkitting Enterprices | 5,06,272/- மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ள கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1651/2022/இ1

தீர்மானம் எண் 422

தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

32

பார்வை : தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2022 – 2023 நகராட்சி நிர்வாகத் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பு எண்.4, நாள்.07.04.2022

பார்வையில் காணும் தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பில் (2022 -2023) தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்புநடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்கப்பட்டு அவர்கள் எவ்வித சிரமும் இன்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்பட்டும். என அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தில் மேற்காணும் சட்டமன்ற அறிவிப்பின்படி நகராட்சிகளில் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேட்டுப்பாளையம் நகராட்சியில் 04.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி எதுவும் வரப்பெறவில்லை. எனவே, இப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களால் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி பெறப்பெற்று 14.07.2022 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் சாலையோர வியாபார கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | திருவாளர்.J.Engineers ,சேலம் | ரூ.700 |
| | | திருவாளர். எஸ்.எஸ்.அசோசியேட்ஸ், சேலம் | ரூ.750/- |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தத்தொகை கொடுத்துள்ள திருவாளர். J.Engineers சேலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 423

தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

33

மேட்டுப்பாளையம் நகராட்சியில் கல்விநிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 26.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.33 நடூர் நகரவை துவக்கப்பள்ளியில் ஒருங்கிணைந்த சமையற்கூடம் கட்டுதல் | ரூ.23.60 இலட்சம் | திருவாளர். Gind infra pvt Ltd | 27.56% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திருவாளர். V.R.K. கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4.69% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு.D.ராஜ்குமார் | 6.85% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். V.R.K. கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1652/2022/இ1

தீர்மானம் எண் 424

தீர்மானம் அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.